# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:142 ★22.09.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:142 ★22.09.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai




## 928 மனுக்கள்... உடனடி தீர்வுக்கு உத்தரவு; 4 பேருக்கு ரூ.46.94 லட்சம் நலத்திட்ட உதவிகள்

### மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி, செயற்கைக் கால்கள்; தூய்மை பணியாளர் குடும்பத்துக்கு ரூ.10.05 லட்சம் விபத்து மரண நிதி

திருவண்ணாமலை, செப்.22

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து 928 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பெற்றுக்கொண்டு, மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து உரிய தீர்வு காண வேண்டும் என அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார். கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள், சாலை வசதி, அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மை பயிர்க்கடன், புதிய குடிநீர் தேக்கத்தொட்டி, தாட்கோ கடனுதவி, கூட்டுறவு பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர்.

மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர், ஒவ்வொரு கோரிக்கையின் தன்மையையும் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

குறைதீர்வு கூட்டங்களில் 1,187 மனுக்கள்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட 928 மனுக்களுடன், செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள்கூட்டத்தில் 171 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 88 மனுக்களும் பெறப்பட்டன. இம்மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு உடனடி உதவி

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் உதவி உபகரணங்கள் கோரி மனு அளித்த மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஒருவருக்கு ரூ.15,750 மதிப்பிலான சக்கர நாற்காலியும், 3 பேருக்கு ரூ.31,192 மதிப்பிலான நவீன செயற்கைக் கால்களும் என 4 பேருக்கு மொத்தம் ரூ.46,942 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

தூய்மை பணியாளர் குடும்பத்துக்கு ரூ.10.05 லட்சம்

தாட்கோ சார்பில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம் போளூர் வட்டம் பெரியகரம் கிராமத்தைச் சேர்ந்த தூய்மை பணியாளராக பணியாற்றிய மேனகா சாலை விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுகளான ஹன்சிகா, அரசு மற்றும் ஹரஸ்குமார் ஆகிய 3 பேருக்கும் தலா ரூ.3.35 லட்சம் வீதம் மொத்தம் ரூ.10.05 லட்சம் விபத்து மரண நிதிக்கான வைப்பு தொகை காசோலைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.மேலும், ஆரணி வட்டம் வண்ணாங்குளம் ஊராட்சியைச் சேர்ந்த ஷர்மிளா வீட்டுமனைப்பட்டா கோரி அளித்திருந்த மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவருக்கு வீட்டுமனைப்பட்டாவிற்கான ஆணையையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

ரூ.1.09 கோடி மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள்

முன்னதாக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் செயல்படும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு தாலுகா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் பயன்பாட்டிற்காக மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு முன்னெடுப்பின் கீழ் ரூ.1,09,74,000 மதிப்பிலான உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மின்சார வாகனம் வழங்கப்பட்டது. இந்த மருத்துவ உபகரணங்கள் மற்றும் மின்சார வாகனத்தை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், மருத்துவக் கல்லூரி முதல்வர், மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் இணை இயக்குநர் நலப்பணிகள் முன்னிலையில் மருத்துவர்களிடம் வழங்கினார். இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் எட்வின் வசந்தா, வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாவட்ட சுகாதார அலுவலர் வெங்கடரமணன், தனித்துணை ஆட்சியர் இளவரசன், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவன மண்டல மேலாளர் நாவுக்கரசு உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# "தேனி மாவட்டத்திலேயே துணை மின்நிலையம் இல்லாத ஒரே நகராட்சி"

## சின்னமனூரில் நிலம் ஒதுக்கீட்டை விரைவுபடுத்த பொதுமக்கள் கோரிக்கை

தேனி மாவட்டத்தின் மிக முக்கிய வணிக மற்றும் தொழில்துறை நகரங்களில் ஒன்றான சின்னமனூரில், நகராட்சி பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள ஓடைப்பட்டி, மார்க்கையன் கோட்டை, புலிக்குத்தி, ஐய்யம்பட்டி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமப்புற பகுதிகளில் 30,000க்கும் அதிகமான மின் இணைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான விவசாய பம்ப் செட்கள், விசைத்தறிகள், கார்ட்போர்டு தொழிற்சாலைகள் மற்றும் நூற்றுக்கணக்கான பனியன் தைக்கும் சிறு நிறுவனங்கள் இயங்கி வருவதால் நாளுக்கு நாள் மின்சார நுகர்வு கணிசமாக அதிகரித்து வருகிறது. தேனி மாவட்டத்தில் உள்ள தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி, கம்பம், கூடலூர் என அனைத்து நகராட்சி பகுதிகளிலும் பிரத்யேக துணை மின் நிலையங்கள் அமைந்துள்ளன. ஆனால், மாவட்டத்தில் துணை மின்நிலையம் இல்லாத ஒரே நகராட்சியாக சின்னமனூர் மட்டுமே உள்ளது என்பது சின்னமனூர் நகராட்சியின் அவலத்தன்மையையே காட்டுகிறது. தற்போது சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான மின் தேவைகள், ஐய்யம்பட்டி துணை மின் நிலையத்தில் இருந்தே அடர்ந்த தென்னந்தோப்புகள் மற்றும் விவசாய வயல்வெளிகள் வழியாக நீண்ட தூர உயர் அழுத்த மின் பாதைகள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன.

இதனால் காற்று, மற்றும் மழை காலங்களில் மின்தடை ஏற்படும் போது வயல்வெளிகளுக்குள் சென்று உடனடியாக பழுதுநீக்குவதில் மிகுந்த சிரமமும் காலதாமதமும் ஏற்படுகிறது.



இந்த பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வாக சின்னமனூரில் புதிய துணை மின்நிலையம் அமைக்க மின்சார வாரியம் தயாராக இருந்தாலும், அதற்கு தேவையான தகுந்த அரசு நிலத்தை சின்னமனூர் நகராட்சி எல்லைக்குள் தேர்வு செய்து வழங்குவதில் தொடர்ந்து காலதாமதம் நீடித்து வருகிறது. அதே நேரத்தில், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளின் நலன் கருதி காமயகவுண்டன் பட்டியில் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் 2.5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அங்கு முதற்கட்ட பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது குறிப்பிடத்தக்கது. பொதுவாக, ஒரு மாவட்டத்தில் உள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் வருவாய்த்துறையை ஒருங்கிணைத்து, மின்சார வாரியத்திற்கு தேவையான அரசு நிலத்தை கண்டறிந்து உடனடியாக ஒதுக்கீடு செய்ய உத்தரவிடும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கே உள்ளது. அதேநேரத்தில், சின்னமனூர் நகராட்சியில் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக நிரந்தர நகராட்சி ஆணையாளர் இல்லாத நிலையும் நீடித்து வருகிறது. எனவே, தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் இதில் உடனடியாக தலையிட்டு, சின்னமனூர் நகராட்சிக்கு நிரந்தர ஆணையாளரை நியமிப்பதோடு, நகராட்சி நிர்வாகத்திற்கும் வருவாய்த்துறையினருக்கும் உரிய உத்தரவுகளை பிறப்பித்து, புதிய துணை மின்நிலையம் அமைப்பதற்கான நிலத்தை விரைவாக அடையாளம் கண்டு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், இதன் மூலம் சின்னமனூர் பகுதியின் தொழில் மற்றும் விவசாய மேம்பாட்டிற்கு தடையற்ற மின்சாரம் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.50 ஆயிரம் வரை கடனுதவி!

## திருவண்ணாமலையில் லோக் கல்யாண் மேளாவில் 50 பேருக்கு நிதியுதவி

திருவண்ணாமலை, செப்.22

திருவண்ணாமலை மாநகராட்சி சார்பில் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் நிதி (PMSVANidhi) திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கான லோக் கல்யாண் மேளா சிறப்பு முகாம் மாநகராட்சி ஆணையர் கு.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

முகாமில் முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் இந்தியன் வங்கி மேலாளர்களின் உதவியுடன், தகுதியான 50 சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் முதல் தவணையாக ரூ.15,000, இரண்டாவது தவணையாக ரூ.25,000, மூன்றாவது தவணையாக ரூ.50,000 வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இதன் மூலம் சாலையோர வியாபாரிகள் தங்களது வணிகத்தை மேம்படுத்தி, வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

69 புதிய வியாபாரிகள் பதிவு

லோக் கல்யாண் மேளாவின் ஒரு பகுதியாக, இதுவரை திட்டத்தில் பதிவு செய்யாத 69 புதிய சாலையோர வியாபாரிகளின் விவரங்கள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டன. இதன் மூலம் அவர்கள் அரசின் திட்டப் பயன்களைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.



மேலும், சாலையோர உணவு வியாபாரிகளின் சுகாதாரம் மற்றும் உணவின் தரத்தை உறுதி செய்யும் வகையில், 75 சாலையோர வியாபாரிகளுக்கு உணவுப் பாதுகாப்பு குறித்த சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

முகாமில் வங்கிக்கடனுதவி பெறுவதற்கான நடைமுறைகள், திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தவணைகள் மற்றும் சாலையோர வியாபாரிகளுக்கான அரசு நலத்திட்டங்கள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன. சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் சிறு தொழில்களை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லவும் இதுபோன்ற சிறப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும் என மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# "டெங்கு பரவலை தடுக்க வீடு வீடாக தீவிர கண்காணிப்பு!" ஜெய்பீம் நகரில் ஆட்சியர் வந்தனா கார்க் நேரில் ஆய்வு

திருவண்ணாமலை, செப்.22

திருவண்ணாமலை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் ஜெய்பீம் நகரில் வீடு வீடாக சென்று நேரில் ஆய்வு செய்தார்.

திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட ஜெய்பீம் நகரில் இன்று (21.09.2026) நடைபெற்ற ஆய்வின் போது, மாநகராட்சி மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் வீடுகள் தோறும் மேற்கொண்டு வரும் கொசு ஒழிப்பு பணிகளை ஆட்சியர் பார்வையிட்டார். அப்போது வீடுகளில் உள்ள குடிநீர் தொட்டிகள், தண்ணீர் தேங்கும் பகுதிகள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ள இடங்களை ஆய்வு செய்தார். தேவையற்ற பொருட்களை வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் தேங்கவிடாமல் உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், சுற்றுப்புறத்தை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.



மேலும், கொசுப்புழுக்கள் உருவாகும் வகையில் தண்ணீர் தேங்கியுள்ளதா என்பது குறித்து சுகாதாரப் பணியாளர்கள் தொடர்ந்து கண்காணித்து உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாநகரம் முழுவதும் தீவிர கண்காணிப்பு

திருவண்ணாமலை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் வார்டு வாரியாக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அகற்றும் பணியை தீவிரப்படுத்துமாறு மாநகராட்சி நிர்வாகத்திற்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

காலி மனைகள், வணிக வளாகங்கள், புதிதாக கட்டப்பட்டுவரும்கட்டுமானப்பகுதிகள்,கல்விநிறுவனங்கள், விடுதிகள், மருத்துவமனைகள், அரசு கட்டடங்கள், குடியிருப்புகள் மற்றும் அவற்றின் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்கும் இடங்களை கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

குறிப்பாக தேங்காய் மட்டைகள், உடைந்த ஓடுகள், கண்ணாடிப் பொருட்கள், பழைய டயர்கள் உள்ளிட்ட தண்ணீர் தேங்கக்கூடிய தேவையற்ற பொருட்களை கண்டறிந்து அகற்றுவதுடன், அவற்றில் கொசுப்புழுக்கள் உருவாகாத வகையில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆட்சியர் தெரிவித்தார்.

டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பெயரளவில் இல்லாமல், மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், கொசு உற்பத்திக்கான வாய்ப்புள்ள இடங்கள் கண்டறியப்பட்டவுடன் உடனடியாக அவற்றை அழிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாவட்ட சுகாதார அலுவலர் வெங்கட்ரமணன், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# த.வெ.க நிர்வாகிகளால் தாக்கப்பட்ட சின்னமனூர் நகர அளவையர் மற்றும் உதவியாளர்

சின்னமனூர் அண்ணாமலை நகரை சேர்ந்த பிச்சைமணி, முத்துச்செல்வி தம்பதியினருக்கு சொந்தமான மனையிடத்தை அளப்பதில் சந்தேகம் இருந்துள்ளது. இது குறித்து அவர்கள் முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு மனு அளித்திருந்தனர். அம்மனுவின் அடிப்படையில், நிலத்தை அளந்து நடவடிக்கை



எடுக்குமாறு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவிட்டார்.

வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவின் பேரில், சின்னமனூர் நகர நில அளவையர் ஜெகன்குமார் (35) மற்றும் அவரது உதவியாளர் மணிமாறன் (35) ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று நிலத்தை அளக்கும் பணியில் ஈடுபட்டனர். நிலத்தை அளந்து முடித்துவிட்டு அவர்கள் கிளம்பத் தயாரான போது, அங்கு வந்த தமிழக வெற்றிக் கழகத்தை (த.வெ.க) சேர்ந்த நிர்வாகிகள், "இங்கு நிலத்தை அளக்க கூடாது" என்று கூறி தகராறில் ஈடுபட்டுள்ளனர். அதற்கு நில அளவையர், "நாங்கள் வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவின் பேரில்தான் அளக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். ஆனாலும், அதை ஏற்றுக்கொள்ளாத த.வெ.க நிர்வாகிகள் நில அளவையர் ஜெகன்குமாரை கடுமையாக தாக்கியுள்ளனர். இதை தடுத்து கேட்க வந்த உதவியாளர் மணிமாறனையும் அவர்கள் கொடூரமாக தாக்கியுள்ளனர். இந்த தாக்குதலில் பலத்த காயமடைந்த இருவரையும் அருகில் இருந்தவர்கள் மீட்டு உடனடியாக சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், மேல் சிகிச்சைக்காக தேனி,க. விலக்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# செங்குன்றத்தில் ஏழை எளியமக்களுக்கு அறுசுவை அன்னதானம்

செங்குன்றம், செப்டம்பர் 22:

மாதவரம் தொகுதி செங்குன்றம் ஆர்.ஆர்.சி. தெருவில் செங்குன்றம் (நாரவாரி குப்பம்) பேரூராட்சி முன்னாள் தலைவரும் முன்னாள் காங்கிரஸ் கமிட்டி மாவட்ட துணை தலைவரும் செங்குன்றம் பளுதூக்கும் தொழிலாளர்கள் சங்க



தலைவரும் முன்னாள் லாரி உரிமையாளர் சங்க தலைவருமான மறைந்த ஆர். ஆர்.சக்கரபாணியின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில செயலாளர் ஆர்.ஆர். சாந்தகுமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு முன்னாள் மாவட்ட தலைவர் ஆர்.எம்.தாஸ், செங்குன்றம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆர்.ஆர். ராஜுவ் காந்தி, மாநில சட்டபிரிவு பொது செயலாளர் ஆர்.மதுமதி, செங்குன்றம் (நாரவாரி குப்பம்) பேரூராட்சி 6வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலர் லீலாவதி சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு ஆர்.ஆர்.சக்கரபாணி திருஉருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர்கள் தூவி தீபாராதனைகாண்பித்துமரியாதைசெலுத்தினர்.

பின்னர் சுற்றுவட்டாரத்தில் உள்ள சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளியமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் புழல் குபேந்திரன், டாக்டர் வெங்கடேசன், வட்டார தலைவர்கள் நித்தியானந்தம், வேல்முருகன், நிர்வாகிகள் தீன்அலி, யாசீன், நூர்தீன், நிஷாந்த், ஆனந்தன், சுரேஷ், ரவி, ரஜினி உள்ளிட்ட ஆர்.ஆர்.சி. குடும்பத்தினர்கள், நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# திருவண்ணாமலை போட்டித் தேர்வு பயிற்றுநர்களுக்கு வாய்ப்பு: செப்.30க்குள் விண்ணப்பிக்கலாம்

திருவண்ணாமலை மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நடத்தப்படும் போட்டித் தேர்வு இலவச பயிற்சி வகுப்புகளுக்கு பாடவாரியாக பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதால், தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் செப்டம்பர் 30க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலம் டி.என்.பி.எஸ்.சி., டி.என்.யூ.எஸ்.ஆர்.பி., எஸ்.எஸ்.சி., ஆர்.ஆர்.பி., ஐ.பி.பி.எஸ்., டி.ஆர்.பி. உள்ளிட்ட தேர்வு முகமைகள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஆண்டுதோறும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்புகளை நடத்தும் பயிற்றுநர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.800 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு வகுப்பிற்கும் பிபிடி, மதிப்பீட்டு வினாக்கள் மற்றும் மாதிரித் தேர்வு வினாக்களை தயாரித்து வழங்க வேண்டும்.

தற்போது இந்தியப் பொருளாதாரம், இந்திய வரலாறு, இந்திய ஆட்சியியல், தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாடு, மரபு மற்றும் சமூக அரசியல் இயக்கங்கள், தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட பாடப்பிரிவுகளுக்கு பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்திய முன் அனுபவம் பெற்றவர்கள், முன்னாள் மாணவர்கள், போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் தமிழ், ஆங்கில வழிகளில் வகுப்புகள் நடத்தத் தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் https://forms.gle/tWEER6pANCbg9zsF8 என்ற கூகுள் இணைப்பு மூலமாகவும், அலுவலக வேலை நாட்களில் நேரடியாகவும் விண்ணப்பத்தை நிறைவு செய்து செப்டம்பர் 30க்குள் சமர்ப்பிக்கலாம்.

நேர்காணலுக்குஅழைக்கப்படும் விண்ண ப்பதாரர்கள் தாங்கள் தயாரித்த பாடக் குறிப்புகள், மாதிரி வினாக்கள்மற்றும்தொடர்புடைய பாடத்திற்கான பிபிடி ஆகியவற்றை கொண்டு வர வேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தில் ஏதேனும் ஒரு தலைப்பில் 10 முதல் 15 நிமிடங்கள் மாதிரி வகுப்பு நடத்த வேண்டும். விண்ணப்பதாரர்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், தற்குறிப்பு மற்றும் அனைத்து கல்விச்சான்றிதழ்களுடன் திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை அணுகலாம். கூடுதல் விவரங்களுக்கு 04175 233381 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரிமாவட்டம். நாகர்கோவிலில் இருந்து நெல்லை செல்லும்பாதை ஒழுகினசேரியில் ரயில்வேபாலத்தின் மேல் மேம்பாலம் புதிதாக கட்டப்பட்டுள்ளது, ஒரு சிலநாட்களுக்குள் பாலத்தின் இணைப்புபகுதி சேதம் . வாகன ஓட்டிகளின்பெரும்அவதி. பாதுகாப்பு கருதி மாவட்ட நிர்வாகம் பாலத்தை ஆய்வு செய்து சீரமைக்க நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் வேண்டுகோள்.



வேடசந்தூர்: கரூர் திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தின் மீது அரசு விரைவுப் பேருந்து மோதிய விபத்தில் சதீஷ்குமார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு

சதீஷ்குமாரின் உடலை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்



# ஆற்றுப்பள்ளத்தில் மூழ்கி இரண்டரை வயது சிறுவன் பலி; செங்கம் அருகே சோக சம்பவம்

திருவண்ணாமலை மாவட்டம்செங்கம் அருகே வீட்டின் அருகே விளையாடச் சென்ற இரண்டரை வயது சிறுவன் செய்யாற்றின் ஆற்றுப்பள்ளத்தில் தேங்கியிருந்த நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த கொட்டாவூர் இந்திரா நகர் பகுதியை சேர்ந்த ஓட்டுநர் சக்திவேல்–ஐஸ்வர்யா தம்பதியரின் இரண்டரை வயது மகன் தேவதர்ஷன். செய்யாற்றின் கரையோரத்தில் உள்ள வீட்டில் வசித்து வரும் நிலையில், சம்பவத்தன்று வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் எதிர்பாராதவிதமாக செய்யாற்றின் ஆற்றுப்பள்ளத்தில் தேங்கியிருந்த நீரில் தவறி விழுந்ததாக கூறப்படுகிறது. இதில் நீரில் மூழ்கிய சிறுவன் மூச்சுத்திணறி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தான். சிறுவனை காணவில்லை என பதற்றமடைந்த தாய் ஐஸ்வர்யா பல்வேறு இடங்களில் தேடியுள்ளார். அப்போது ஆற்றுப் பள்ளத்தில் சிறுவன் நீரில் மூழ்கி மிதந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனடியாக சிறுவனை மீட்டு செங்கம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து தகவலறிந்த செங்கம் காவல்துறையினர் சிறுவனின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காகஅரசுமருத்துவமனைக்குஅனுப்பிவைத்தனர். மேலும், சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வீட்டின் அருகே விளையாடச் சென்ற இரண்டரை வயது சிறுவன் ஆற்றுப்பள்ளத்தில் தேங்கியிருந்த நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் கொட்டாவூர் இந்திரா நகர் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் மகள் மரணமடைந்ததையெட்டி சிவாஜி ரசிகர் மன்ற ரசிகர்கள் மற்றும் காங்கிரஸ் பிரமுகர்கள் சேர்ந்து மவுன அஞ்சலி ஊர்வலம் சென்றனர் இதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் பழனி நகர தலைவர் முத்து விஜயன் தலைமை தாங்கினார்



இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டை நகராட்சியிலிருந்து இரண்டு லாரிகளில் 25.890(MT) மெட்ரிக் டன் பிளாஸ்டிக் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு ஆனையாளரின் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்டது.

இதுவரை 170 டன் பிளாஸ்டிக் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டுள்ளது இப்பனி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., ஆற்காடு அண்ணாசாலையில்உள்ளகோஆப்டெக்ஸ்விற்பனை கடையில் தீபாவளி 2026 பண்டிகையை முன்னிட்டு 30% சிறப்பு தள்ளுபடி விற்பனை மற்றும் முதல் விற்பனையினை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். உடன் கோஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் பெ.ஸ்டாலின், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி வ.ர.விஜயகுமார், இரக மேலாளர் ச.பெருமாள், விற்பனை நிலைய மேலாளர் ஜெ. கணேஷ் மற்றும் திரளான வாடிக்கையாளர்கள் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டை நகராட்சி ஆனையாளர் உத்தரவின் பேரில் இராணிப்பேட்டைகிரேஸ்மெட்ரிக்பள்ளியில்டெங்கு காய்ச்சல்முன்தடுப்புநடவடிக்கையாகபுகைப்போக்கி இயந்திரம் மூலம் புகைமருந்து அடிக்கும் பணியில் நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டனர்.

# பெரியகுளம் இராஜேந்திர சோழீஸ்வரர் கோவிலில் உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் சார்பில் சிறப்பு உழவாரப்பணி

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியர், அன்னை ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனுறை ஸ்ரீ இராஜேந்திர சோழீஸ்வரர் திருக்கோவிலில், உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் (தேனி மாவட்டம்) மற்றும் திலகவதியார் அம்மையார் உழவாரப்பணி குழு சார்பில் சிறப்பு உழவாரப்பணி 20 092026 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலையத் துறை மற்றும் திருக்கோவில் நிர்வாகத்தின் முறையான அனுமதியோடு நடைபெற்ற இத்திருப்பணிக்கு, உலக சிவனடியார்கள் திருக்கூட்டத்தின் தேனி மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் கம்பம் சிவ A. இராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். பெரியகுளம் ஸ்ரீ இராஜேந்திர சோழீஸ்வரர் நால்வர் திருமடம் சிவனடியார்கள் திருக்கூட்ட அடியார்கள் உழவாரப்பணிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து, வருகை தந்த அனைவருக்கும் அன்னம்பாளிப்பும் பிரசாதமும் வழங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில் கம்பம் சிவனடியார்கள் திருக்கூட்ட தலைவர் TSPK. ரமேஸ், மாவட்ட தலைமை இணை ஒருங்கிணைப்பாளர் (உத்தமபாளையம்) சிவ. லெ. செந்தில் செல்வம், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் சிவ. மணிமுருகன் (வீரபாண்டி), சிவ. பொன்



னுச்சாமி, பெரியகுளம் நால்வர் திருமடத்தின் செயலாளரும் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளருமான சிவ. ஈஸ்வரன் மற்றும் திருவாசகம் முற்றோதுதல் குழு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி சிவ அபிராமி ஆகியோரின் திறம்பட மேற்பார்வையில் பணிகள் சிறப்பாக நடைபெற்று முடிந்தன. இப்பணி சிறப்பாக நடைபெற அனுமதி அளித்த இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், திருக்கோவில் நிர்வாகத்தினர், சிவாச்சாரியார்கள், கோவில் பணியாளர்கள் மற்றும் இதில் கலந்து கொண்டு தொண்டாற்றிய சிவனடியார்கள், பொது மக்கள் அனைவருக்கும் உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. மேலும், இனிவரும் காலங்களில் மாதம் தோறும் தேனி மாவட்டத்திலுள்ள பழமையான சிவாலயங்கள் மற்றும் திருக்கோவில்களில் தொடர்ச்சியாக உழவாரப் பணிகளை மேற்கொள்வது என்றும், திருவாசகம் முற்றோதுதல் நிகழ்வுகளை நடத்துவது என்றும் உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் சார்பில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமைமக்கள்குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்ந.ப்ரியா ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில்நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள்.



மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த் துறை நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப் பட்டா,முதியோர் உதவித்தொகை வேளாண்மைத் துறை, காவல்துறை,ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித் துறை, கூட்டுறவு, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலை வாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் பொதுநலன் குறித்த 517 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனு நிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.6.31 இலட்சம் மதிப்பீட்டிலான செயற்கை அவயங்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன், சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் கீதாலட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பூமா, நேர்முக உதவியாளர் (நிலம்) சுமதி, பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபா ன்மையினர் நல அலுவலர் மீனா, மாவட்ட வழங்கல் அலுவலர் பன்னீர் செல்வம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செந்தில் குமாரி மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

செங்குன்றம், செப்டம்பர் 22:

சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் பைபாஸ் சாலை ஜோதி ரேணுகா திருமண மண்டபத்தில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஜி.கே. இனியன், சிஎஸ்எஸ்டி. சீனிவாசன், வேல் கணேசன், டிஜிஆர். மணிவண்ணன், சின்ன மாத்தூர் மணிகண்டன், புழல் ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ் ஆகியோர் முன்னிலை ஆகியோர் வகித்தனர். அக்டோபர் ஆறாம் தேதி நடைபெற உள்ள மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் சென்னை வடகிழக்கு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பகு





திக்கு நேரில் சென்று வீட்டுக்கு வீடு வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் சேகரிப்பது என்றும், தமிழகத்தில் நடைபெற்று வரும் தொடர் கொலை ,கொள்ளை, மின்வெட்டு ஆகியவற்றை தடுக்க தவறிய தவெக அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதென்றும், திமுக இளைஞரணி செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்க ப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய பகுதி பேரூர் கழகத்தின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# கொட்டித் தீர்த்த கனமழை... ஆர்ப்பரித்து கொட்டும் பீமன் நீர்வீழ்ச்சி

## இயற்கை எழிலில் திளைக்கும் ஜவ்வாதுமலை

ஜவ்வாதுமலை,செப்.22

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை மற்றும் அதன் அடிவாரப் பகுதிகளில் கடந்த 2 நாட்களாக பெய்து வரும் தொடர் கனமழையால், நீண்ட நாட்களாக வறண்டுகாணப்பட்டபீமன்நீர்வீழ்ச்சியில் மீண்டும் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டத் தொடங்கியுள்ளது. இதனால் ஜவ்வாதுமலை முழுவதும் பசுமை போர்த்திய இயற்கைக் காட்சியுடன் ரம்மியமாக காட்சியளித்து வருகிறது.

ஜவ்வாதுமலை பகுதியில் பெய்து வரும் மழையால் மலைப்பகுதிகளில் உள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்கத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக மலைப்பகுதிகளில் இருந்து வெளியேறும் மழைநீர் பீமன் நீர்வீழ்ச்சியை நோக்கி பெருக்கெடுத்து வருகிறது. இதனால் நேற்று முதல் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வரத்து கணிசமாக அதிகரித்து, பாறைகளில் மோதியபடி வெள்ளியைப் போன்று தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.



மழையால் மாறிய ஜவ்வாதுமலையின் தோற்றம்

கோடை மற்றும் மழையின்றி இருந்த காலங்களில் நீர்வரத்து குறைந்து, பீமன் நீர்வீழ்ச்சி வறண்ட நிலையில் காணப்பட்டது. தற்போது பெய்துள்ள மழையால் நீர்வீழ்ச்சிக்கு மீண்டும் உயிர் கிடைத்து ள்ளதுபோல் காட்சியளிக்கிறது. நீர்வீழ்ச்சியைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் பசுமை அதிகரித்துள்ளது. மலைச்சரிவுகள், மரங்கள், செடி கொடிகள் மற்றும் பாறைகளுக்கு இடையே வழிந்தோடும் மழைநீர் என ஜவ்வாதுமலையின் இயற்கை அழகு மேலும் அதிகரித்துள்ளது. மழை மேகங்கள் சூழ்ந்த மலைப்பகுதிகளும், பனிப்பொழிவு போன்ற குளிர்ச்சியான சூழலும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகின்றன.

சுற்றுலாப் பயணிகள் ஆர்வம்

பீமன் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டும் தகவல் பரவியதை தொடர்ந்து, ஜவ்வாதுமலைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நீர்வீழ்ச்சியை காண ஆர்வம் காட்டி வருகின்றனர். நீர்வீழ்ச்சியின் அழகை ரசிக்கும் பொதுமக்கள் தங்களது செல்போன்களில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து மகிழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக, மழைக்குப் பின்னர் பீமன் நீர்வீழ்ச்சி யின் தோற்றம் மிகவும் அழகாக மாறியுள்ளதால், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கவனம் ஜவ்வாது மலை நோக்கி திரும்பியுள்ளது.

நீர்வரத்து அதிகரிப்பால் எச்சரிக்கை

அதே நேரத்தில், தொடர் மழை பெய்து வருவதால் நீர்வீழ்ச்சியில் திடீரென நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மலைப்பகுதிகளில் மழைபெய்யும்நேரங்களில்நீர்வீழ்ச்சிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என்பதால், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்புடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

நீர்வீழ்ச்சியின் பாறைகள் மழையால் வழுக்கும் நிலையில் இருப்பதால், ஆபத்தான பகுதிகளுக்குச் செல்வதை தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் இருந்து இயற்கைக் காட்சிகளை ரசிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

விவசாயிகளும் மகிழ்ச்சி

ஜவ்வாதுமலை மற்றும் அதன் அடிவார கிராம ங்களில் பெய்து வரும் மழையால் அப்பகுதி விவசாயி களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மழை தொ டர்ந்து பெய்தால் மலைப்பகுதிகளில் உள்ள சிறு நீரோடைகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட நாட்களுக்குப் பிறகு பீமன் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுவதால், ஜவ்வாதுமலை மீண்டும் இயற்கை எழிலின் உச்சத்திற்கு திரும்பியு ள்ளது. மலைப்பகுதியில் பெய்த மழை, வறண்டு கிடந்த நீர்வீழ்ச்சிக்கு புத்துயிர் அளித்துள்ளதுடன், அப்பகுதியை சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் முக்கிய இயற்கைச் சுற்றுலாத் தலமாக மாற்றியுள்ளது.



# "கூடலூர் போலீசாரின் தீவிர சோதனையில் சிக்கிய 190 கிலோ கஞ்சா"

## 4 பேர் கைது, 2 சொகுசு கார்கள் பறிமுதல்

தேனி மாவட்டம் கூடலூர் பகுதியில் போலீஸார் நடத்திய தீவிர வாகன சோதனையின்போது, கேரள மாநிலத்திற்கு கடத்த முயன்ற சுமார் ரூ.1 கோடி மதிப்பிலான 190 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 4 பேரை போலீஸார் கைது செய்ததோடு, கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 2 சொகுசு கார்களையும் பறிமுதல் செய்தனர்.

கூடலூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் பிரபுவின் உத்தரவின்பேரில், உதவி ஆய்வாளர் ரவி தலைமையிலான காவல் துறையினர் கூடலூரிலிருந்து குமுளி செல்லும் பைபாஸ் சாலையில் உள்ள ஒத்தைவீட்டு பிரிவு அருகே தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக அடுத்தடுத்து வந்த இரண்டு சொகுசு கார்களை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். அச்சமயத்தில் கார்களில் இருந்த நபர்கள் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்ததால் சந்தேகமடைந்த போலீஸார், வாகனங்களை தீவிரமாக சோதனையிட்டனர். அதில், 95 பார்சல்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 190 கிலோ கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, கார்களில் இருந்த ராமநாதபுரம் மாவட்டம் கடுகுசந்தை சத்திரத்தை சேர்ந்த முத்துப்பாண்டி (25), சாயல்குடியை சேர்ந்த முகமது அனிபா (45), துரைச்சாமிபுரத்தை சேர்ந்த அலியார் (46) மற்றும் அப்பனூரை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி (34) ஆகிய 4 பேரையும் போலீஸார் கைது செய்தனர். காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடத்தப்பட்ட விசாரணையில், கஞ்சாவை கேரளத்தில் விற்பனை செய்வதற்காக கடத்திசென்றது உறுதியானது.

கைது செய்யப்பட்ட 4 பேரையும், பறிமுதல் செய்யப்பட்ட 190 கிலோ கஞ்சா மற்றும் 2 சொகுசு கார்களையும் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போலீஸார், பின்னர் அவர்களை சிறையில் அடைத்தனர். மேலும், இந்த செய்தி தொடர்பில் தலைமறைவாக உள்ள ராமநாதபுரம் மாவட்டம் கடுகு சந்தை சத்திரத்தை சேர்ந்த காளீஸ்வரன் என்பவரை போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

மருத்துவமனை எதிரே கடைகளை அகற்றியதால் வாழ்வாதாரம் பாதிப்பு:

# சிறு வியாபாரிகளுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மாற்று இடம் வழங்க ஆட்சியரிடம் கோரிக்கை

திருவண்ணாமலை, செப்.22–

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை எதிரே பல ஆண்டுகளாக சிறு வியாபாரம் செய்து வரும் சாலையோர வியாபாரிகளின் தற்காலிக கடைகள் அகற்றப்பட்ட நிலையில், தங்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாத பகுதியில் வியாபாரம் செய்ய மாற்று இடம் ஒதுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் சாலையோர வியாபாரிகள் சங்கத்தினர் கோரிக்கை மனு அளித்தனர்.



திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நாள்தோறும் ஏராளமான நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் வந்து செல்கின்றனர். இதையொட்டி மருத்துவமனை எதிரே சிற்றுண்டி, பழங்கள், குடிநீர், நோயாளிகள் மற்றும் அவர்களுடன் இருப்பவர்கள் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள் பல ஆண்டுகளாக கடைகள் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், நெடுஞ்சாலைத் துறையினர் அப்பகுதியில் உள்ள தற்காலிக கடைகளை அகற்ற வேண்டும் என வியாபாரிகளிடம் அறிவுறுத்தினர். இதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை சிறு வியாபாரிகள் மாவட்ட ஆட்சியரை சந்தித்து, தங்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அப்போது மருத்துவமனை எதிரே நிரந்தரமாக கடைகள் அமைக்காமல், தள்ளு வண்டிகள் மூலம் நோயாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பொருட்களை விற்பனை செய்து கொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்ததாக வியாபாரிகள் கூறினர். ஆனால், அதன்பின்னர் சனிக்கிழமை ஆக்கிரமிப்பு அகற்றும் பணிக்கு வந்த அதிகாரிகள் தள்ளுவண்டிகளையும் அகற்றியதாக அவர்கள் தெரிவித்தனர். இதனால் தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், குடும்பச் செலவுகள் மற்றும் குழந்தைகளின் கல்விச் செலவுகளை சமாளிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது அவசியமான நடவடிக்கையாக இருந்தாலும், பல ஆண்டுகளாக சிறு வியாபாரம் செய்து குடும்பத்தை நடத்தி வரும் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், அவர்களது உறவினர்கள் மற்றும் பொதுமக்க ளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையிலும் உரிய இடத்தை தேர்வு செய்து, சிறு வியாபாரிகளுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தற்காலிகமாக வியாபாரம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கையுடன் நிறுத்தாமல், பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் மாற்று இடம் அல்லது நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் அவர்கள் வலியுறுத்தினர். மனு அளிக்கும் நிகழ்வில் சிஐடியு நிர்வாகி கே. சரவணன், சாலையோர வியாபாரிகள் சங்க நிர்வாகி மணிகண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சோளிங்கர் தோப்பு பகுதியில் உடைந்த கல்வெட்டு விபத்து அபாயம் - கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு

## நகராட்சி உடனடியாக சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் நகராட்சிக்கு உட்பட்ட தோப்பு பகுதியில் அம்மன் தெரு, தோப்புளம்மன் தெரு மற்றும் முருகர் கோவிலுக்குச் செல்லும் கூட்டு சாலையில் கழிவுநீர் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு உடைந்து சேதமடைந்த நிலையில் உள்ளது.

இந்த சாலை வழியாக அப்பகுதியைச் சேர்ந்த நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை லோடு ஆட்டோ, வேன் மற்றும் இருசக்கர வாகனங்களில் எடுத்துச் செல்கின்றனர். மேலும், பொதுமக்கள் அன்றாட தேவைக்கான மளிகைப் பொருட்கள், காய்கறிகள் உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்லவும், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்வோர் சென்று வரவும் இந்த சாலையை பயன்படுத்தி வருகின்றனர்.



அதேபோல், தூய்மைப் பணியாளர்கள் மூன்று சக்கர வாகனங்களில் சென்று வீடுகள் மற்றும் தெருக்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை எடுத்துச் செல்வதற்கும் இந்த சாலையை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சாலையின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு உடைந்து சேதமடைந்துள்ளதால் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் இல்லாததால், உடைந்த கல்வெட்டு பகுதியில் வாகனங்கள் சிக்கி சிறு விபத்துகள் ஏற்படுவது தொடர்கதையாகி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும், கல்வெட்டு சேதமடைந்துள்ளதால் கழிவுநீர் முறையாக வெளியேற முடியாமல் சில பகுதிகளில் தேங்கி நிற்கிறது. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது. கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள், பள்ளி மாணவ–மாணவிகள் மற்றும் பொதுமக்கள் இதனால் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி சோளிங்கர் நகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, உடைந்து சேதமடைந்துள்ள கல்வெட்டு பகுதியை அகற்றி, புதிய கல்வெட்டு அமைத்து சீரமைக்க வேண்டும். மேலும், கழிவுநீர் தேங்காமல் சீராக வெளியேறும் வகையில் கால்வாய் மற்றும் கல்வெட்டு பகுதியை முறையாக பராமரிக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண இன்று சிறப்பு கூட்டம் - திருவண்ணாமலை கோட்டாட்சியர் தலைமையில் நடைபெறுகிறது

திருவண்ணாமலை ,செப்.22

திருவண்ணாமலை வருவாய் கோட்டத்துக்கு உட்பட்ட விவசாயிகளின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து தீர்வு காணும் வகையில், செப்டம்பர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் இன்று செப்டம்பர் 22ஆம் தேதி நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின்படி, திருவண்ணாமலை வருவாய் கோட்டத்துக்கு உட்பட்ட திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு மற்றும் கீழ்பென்னாத்தூர் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் குறைகளை கேட்டறியும் வகையில், ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

நிர்வாக காரணங்களால் செப்டம்பர் மாதத்திற்கான கூட்டம் செப்டம்பர் 22ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை நகரில் காமராஜர் சிலை அருகே அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், விவசாயிகள் தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை நேரடியாகத் தெரிவிக்கலாம். மேலும், வேளாண்மை மற்றும் விவசாயம் சார்ந்த பல்வேறு அரசு திட்டங்கள், அவற்றைப் பெறுவதற்கான நடைமுறைகள், திட்டங்களை முறையாகப் பயன்படுத்தும் விதம் உள்ளிட்ட தகவல்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இதுதவிர, விவசாயப் பொருட்களை பாதுகாப்பாக கையாளுதல், அவற்றைப் பயன்படுத்தும்போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளிட்டவை குறித்தும் விவசாயிகளுக்கு துறை அலுவலர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

எனவே, திருவண்ணாமலை வருவாய் கோட்டத்துக்கு உட்பட்ட நான்கு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளைத் தெரிவித்து, அரசு திட்டங்கள் மற்றும் துறை சார்ந்த விளக்கங்களைப் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# அரசு குழந்தைகள் இல்லத்தில் 3 ஆற்றுப்படுத்துநர் பணியிடங்கள் - பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

திருவண்ணாமலை,செப்.22

திருவண்ணாமலை மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு குழந்தைகள் இல்லத்தில் 3 ஆற்றுப்படுத்துநர் பணியிடங்கள் மதிப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.தமி ழ்நாடு அரசு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் இயங்கி வரும் அரசு குழந்தைகள் இல்லங்களில் தங்கி பயிலும் குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் தேவையான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவைகளை வழங்க அரசாணை நிலை எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 28.12.2020ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் அரசு குழந்தைகள் இல்லத்தில் பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கக்கூடிய வகையில் 3 ஆற்றுப்படுத்துநர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இப்பணிக்கு உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் தொடர்பான கல்வியில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் தங்களது கல்வித் தகுதி உள்ளிட்ட உரிய சான்றிதழ்களின் நகல்களுடன் அறிவிப்பு வெளியான நாளில் இருந்து 15 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

பெறப்படும் விண்ணப்பங்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் துறை வல்லுநர்கள் அடங்கிய தேர்வுக் குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு, நேர்முகத் தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு ஒரு வருகைக்கு நாள் ஒன்றுக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1,000 மதிப்பூதியம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், வட்டாட்சியர் அலுவலக வளாகம், திருவண்ணாமலை – 606 601 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04175–223030 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது திருவண்ணாமலை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலரை அணுகி விவரங்களைப் பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்வந்தனாகார்க்தெரிவித்துள்ளார்.

# சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில் மதுராந்தகம் கிளியாநகரில் வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 22:

மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத்தேர்தலை முன்னிட்டு, கிளியாநகர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் திமுக நிர்வாகிகளையும் பொதுமக்களையும் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் சிவபெருமாள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.





தமிழ்நாடு தொல்லியல் துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., (மு.கூ.பொ) இராணிப்பேட் மாவட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சியில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள குடைவரைக் கோயிலில் (பஞ்சபாண்டவர் மலை) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., வட்டாட்சியர் சண்முக சுந்தரம், தொல்லியல் துறை அலுவலர் காவியா மற்றும் பலர் உள்ளனர்.

# செங்குன்றம் சைதானி பீபீ தர்காவில் முஹ்யித்தீன் ஆண்டகை கொடியேற்றம் நிகழ்ச்சி

செங்குன்றம், செப்டம்பர் 22:

பெருமானார் (ஸல்) அவாக்ள் மீது புகழ் பாடும் பேரவைசார்பில்முஹ்யித்தீன் ஆண்டகை கொடியேற்றம் செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி சைதானி பீபீ தர்காவில் நடைபெற்றது.





நாகூர் தர்கா பரம்பரை கலீஃபா சஜ்ஜாதா நஷீன் டாக்டர் கலீஃபா மஸ்தான் சாகிப் காதிரி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு தர்காவில் அடக்கமாகியுள்ள சைதானி பீபீ அம்மாவிற்கு துஆ ஓதி பச்சை போர்வை, பூமாலை போற்றினார். பின்னர் முஹ்யித்தீன் ஆண்டகை கொடியை ஏற்றி வைத்து உலக மக்களுக்காகவும் இஸ்லாமியர்களுக்காகவும் சிறப்பு பிரார்த்தனை செய்தார். துருக்க சத்திரம் டிரஸ்ட் டிரஸ்டியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெ.எம். ஹாரூண் ரஷீத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சைதானி பீபீ கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் பிபிசி பிரைவேட் லிமிடெட் இயக்குநர் எஸ்.ஏ. சையது அஹமது காதிரி, செங்குன்றம் ஆயிஷா மஸ்ஜித் செயலாளர் எம்.அப்துல் லத்தீப், அம்பத்தூர் காவேரி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் மீரான் உள்ளிட்ட ஆயிஷா மஸ்ஜித் மற்றும் சுற்றுவட்டார பள்ளிவாசல் நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள் திரளாக கலந்து கொண்டனர். பின்னர் அனைவருக்கும் அறுசுவை மட்டன் பிரியாணி வழங்கப்பட்டது. சைதானி பீபீ தர்கா நிர்வாகி எஸ். சையத் கரீமுல்லா உசேனி உள்ளிட்ட தர்கா நிர்வாகிகள் ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தார்.

# UPI கட்டண சுமையை ஏற்க முடியாது; பொதுமக்களுக்கு பாதுகாப்பான டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை வேண்டும்

## கே.ஜி.எஃப் காங்கிரஸ் தலைவர் கார்த்திக் கடும் எதிர்ப்பு

கே.ஜி.எஃப்செப்.22

UPI டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் குறிப்பிட்ட வணிகர் பரிவர்த்தனைகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ள Merchant Discount Rate (MDR) தொடர்பாக, கே.ஜி.எஃப் பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர் கார்த்திக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மற்றும் சிறு வணிகர்களின் நலனை கருத்தில் கொண்டு, டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில் கூடுதல் நிதிச்சுமை ஏற்ப டாத வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியு றுத்தியுள்ளார்.



கார்த்திக் வெளியிட்டுள்ள கருத்தில், UPI என்பது தற்போது பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையுடன் நேரடியாக இணைந்துள்ள டிஜிட்டல் பணப்பரி வர்த்தனை முறையாக மாறிவிட்டதாக வும், சிறு கடைகள் முதல் தெருவோர வியாபாரிகள் வரை ஏராளமானோர் UPI மூலம் பணம் பெறுவதையும் செலுத்துவதை யும் நம்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், UPI பரிவர்த்தனைகளுடன் தொடர்புடைய எந்தவொரு புதிய கட்டண முறையும் பொதுமக்கள் மற்றும் சிறு வணிகர் களுக்கு மறைமுகமான நிதிச்சுமையாக மாறக் கூடாது என்பதே தங்களது நிலைப்பாடு என கார்த்திக் கூறியுள்ளார்.

"பொதுமக்களிடம் சுமை செல்லக்கூடாது!"

UPI தொடர்பான புதிய கட்டண நடைமுறை குறித்து பொதுமக்களிடையே குழப்பம் ஏற் பட்டுள்ள நிலையில், கட்டணத்தின் தன்மை, யார் செலுத்த வேண்டும், அதன் தாக்கம் என்ன என்பது குறித்து அரசு தெளிவான விளக்கத்தை தொடர்ந்து வழங்க வேண்டும் என்றும் கார்த் திக் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக, சிறு வணிகர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் அன்றாட டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை நம்பியுள்ள பொது மக்கள் பாதிக்கப்படாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் அதிகாரப்பூர்வ விளக்கத்தின்படி, ₹2,000 வரை வணிகர் UPI பரிவர்த்தனைக ளுக்கு MDR இல்லை. தனிநபர்–தனிநபர் UPI பரிவர்த்தனைகளும் தொடர்ந்து இலவசமாக இருக்கும். சுமார் 96 சதவீத வணிகர் UPI பரி வர்த்தனைகள் புதிய MDR முறையால் பாதிக் கப்படாது என மத்திய நிதி அமைச்சகம் தெரி வித்துள்ளது.

அதே நேரத்தில், குறிப்பிட்ட வணிகர் பரி வர்த்தனைகளில் ₹2,000க்கு மேல் 0.4 சதவீத MDR விதிக்கப்படும் என்றும், ₹75,000 மற்றும் அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கு அதிகபட்சம் ₹300 என வரம்பு நிர்ணயிக்கப்ப ட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

"MDR என்பது வரி அல்ல" – அரசின் விளக்கம்

இங்கு ஒரு முக்கியமான விஷயத் தையும் தெளிவுபடுத்த வேண்டி யுள்ளது.

அரசின் விளக்கப்படி, இந்த MDR என்பது அரசு வசூலிக்கும் UPI வரி அல்ல.

இது வணிகர் பணப்பரிவர்த்தனை அமைப் புக்குள் விதிக்கப்படும் கட்டணமாகும். மேலும், இந்த கட்டணத்தை வாடிக்கையாளர் களிடம் நேரடியாக வசூலிக்கக் கூடாது என் றும்,

வங்கிகள் வணிகர்கள் அந்தச் சுமையை வாடிக்கையாளர்களிடம் மாற்றாததை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மத் திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆனால், கட்டணம் நேரடியாக பொதுமக்களி டம் வசூலிக்கப்படாவிட்டாலும், அதன் நடைமுறை தாக்கம் குறித்து தெளிவான கண் காணிப்பு தேவை என்பதே கார்த்திக்கின் கருத் தாக உள்ளது.சிறு வணிகர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை தேவைகே. ஜி.எஃப் போன்ற நகர்ப்புற மற்றும் தொழிலா ளர் பகுதிகளில் சிறு வணிகர்கள் மற்றும் அன் றாட வருமானத்தை நம்பியுள்ள வியாபாரிகள் அதிக அளவில் டிஜிட்டல் பணப்பரிவர்த்த னைகளை பயன்படுத்தி வருவதால், அவர்க ளுக்கு கூடுதல் செலவு ஏற்படாத வகையில் நடைமுறை பாதுகாப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று கார்த்திக் தெரிவித்துள்ளார்.

மேலும், UPI என்பது டிஜிட்டல் இந்தியா வின் முக்கியமான பணப்பரிவர்த்தனை முறை யாக வளர்ந்துள்ள நிலையில், அதன் பயன் பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அரசு கொள்கைகள் அமைய வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டண நடைமுறைகள் இருக்கக் கூடாது என்றும் அவர் கூறியு ள்ளார்.

"பொதுமக்கள் டிஜிட்டல் பணப்பரிவர்த்த னையை நம்பி பயன்படுத்தி வரும் நிலையில், எந்த புதிய கட்டண முறையும் பொதுமக்க ளின் நலனுக்கு எதிரானதாக மாறக்கூடாது. சிறு வணிகர்களின் வாழ்வாதாரத்தையும் கருத் தில் கொண்டு அரசு இந்த விவகாரத்தை மறுப ரிசீலனை செய்ய வேண்டும்" என கே.ஜி.எஃப் காங்கிரஸ் தலைவர் கார்த்திக் வலியுறுத்தியுள் ளார்.பொதுமக்களின் கோரிக்கை என்ன?

UPI தொடர்பான புதிய MDR நடைமுறை யில், வாடிக்கையாளர்களிடம் கூடுதல் கட்ட ணம் வசூலிக்கப்படாதது உறுதி செய்யப்பட வேண்டும்; சிறு வணிகர்களுக்கு பாதிப்பு ஏற் படக்கூடாது; கட்டண விவரங்கள் வெளிப்ப டையாக இருக்க வேண்டும் என்பதே முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்த நிலையில், பொதுமக்கள் மற்றும் வணிகர்களின் நலனை கருத்தில் கொண்டு, UPI MDR நடைமுறையை அரசு தொடர்ந்து கண்கா ணித்து, தேவைப்பட்டால் உரிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே கார்த்திக் கின் வலியுறுத்தலாக உள்ளது.

"டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை வளர வேண்டும்; ஆனால் அதன் சுமை பொதுமக் கள் மீது விழக்கூடாது" என்ற கோரிக்கையை முன்வைத்து, கே.ஜி.எஃப் காங்கிரஸ் தலை வர் கார்த்திக் தனது எதிர்ப்பை பதிவு செய்துள் ளார்.

தேசபக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே வயலூரில் தமிழக வெற்றி கழகம் சார்பாக பொதுக்கூட்டம் நடைபெற்றது இந்த பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் தலைமை தாங்கினார் இந்த பொதுக்கூட்டத்தில் மாற்றுக் கட்சிய ினர் ஏராளமான மாற்றுகட்சியிலிருந்து விலகிதங்களேதமிழகவெற்றிகழகம்கட்சியில்இணைத்துக் கொண்டனர் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கட்சியின் நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்

# தவெக மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் வடபெரும் பாக்கம் ஆர்.விஷ்ணு ஏற்பாட்டில் கேரம்போர்டு, வாலிபால்

செங்குன்றம், செப்டம்பர் 22:

தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் நல் லாட்சியில் மாதவரம் தொகுதி 17வது வட்டத்தைச் சேர்ந்த சிறுவர்கள் விளை யாடுவதற்காக கேரம் போர்டு, சிறுமிகளுக்கு வாலிபால் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் விளையா டுவதற்கு தேவை என தவெக மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் வடபெரும்பாக்கம் ஆர்.விஷ்ணு கேட்ட னர்.

தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு ஆலோசனையின் பேரில் தவெக மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் வடபெரும்பாக் கம் ஆர்.விஷ்ணு ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி 17வது வார்டுக்குட்பட்ட அரியலூர் பகுதியை சேர்ந்த சிறுவர் சிறு மிகளுக்கு கேரம்போர்டு, வாலிபால் உள் ளிட்ட விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.






# மதுராந்தகம் செம்பூண்டியில் திமுகவின் ஒன்றிய மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை

செங்குன்றம், செப்டம்பர் 22:

மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத் தேர்தல் வாக்கு சேகரிப்பு பணிகளின் ஒரு பகுதியாக, செம்பூண்டி ஊராட்சியில் திமுகவின் ஒன்றிய மற்றும் கிளைக்கழக நிர்வாகிகளை சென்னை வடகி ழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பி னருமான மாதவரம் எஸ்.சுதர்ச னம் சந்தித்து ஆலோசித்தார். அப்பொழுது அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய அவைத்தலை வர் சிவபெருமாள், சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் உள்ளிட்ட திமுகவினர் உடனிருந்தனர்.






திண்டுக்கல் மாவட்டம் பழனி பாதாள சாக்கடை திட்டம் பழனி ரயில்வே பீடர் ரோட்டில் பாதாளை சாக்கடைதிட்டத்துக்கானகுளியல்தோண்டிகுழாய்கள் பதிக்கும் திட்டத்திற்கு குழிகள் தோன்றும் போது நகராட்சி தண்ணீர் குழாய் உடைந்து வழியில் ஆறு போல் ஓடியது அவளியாக வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து பஸ் ஒன்று பள்ளத்தில் சிக்கியது இதனால் சிறிது நேரம் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டது உடனடியாக போக்குவரத்து துறை சார்ந்த டிரைவர் மற்றும் நடத்துனர் சேர்ந்து உடனடியாக ஜேசிபி இயந்திரத்தை கொண்டு பஸ்ஸே கயிறு போட்டு ஜேசிபி இயந்திரம் மூலம் இழுத்து அப்புறப்படுத்தினர் உடனடியாக போக்குவரத்து இடையூறு சிறிது நேரத்தில் சரி செய்யப்பட்டது

# திண்டுக்கல் அருகே சந்தன மரத்தை வெட்டி திருட முயன்ற வாலிபர் கைது

திண்டுக்கல், வெள்ளோடு, கல்லுப்பட்டி சிறு மலை அடிவாரம் பகுதியை சேர்ந்த விவசாயிக்கு சொந்த மான தோட்டத்தில் இயற் கையாக வளர்ந்த சந்தன மரத்தை மர்மநபர் தொடர்ச் சியாக வெட்டி திருடினர். இந் நி லை யி ல் இன்று அதிகாலை மீண்டும் மேற்படி விவசாயிக்கு சொ ந் த மா ன தோட்டத்தில் சந்தன மரத்தை வெட்டி திருட முயன்ற போது விவசாயி மற் றும் அக்கம் பக்கத்தினர் மர்ம நபரை பிடித்து அம்பாத் துரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.



அம்பாத்துரை போலீசார் மர்ம நபரை கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது அவர் அதிகாரிப்பட் டியை அடுத்த சுக்கா ம்பட் டியை சேர்ந்த பாகன் மகன் தேக்கமலை(31) என்பதும், அவர்சந்தனமரத்தைவெட்டி திருட முயன்றது தெரிய வந் ததை தொடர்ந்து போலீசார் தே க் க ம லை யை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.




திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது இதில் 2003 டு 2006 வரை படித்த மாணவர்கள் கலந்து கொண்டனர் விழாவில்கல்லூரிமுதல்வர்திருரமேஷ்அவர்களுக்கும் திரு கணேஷ் அவர்களுக்கும் முன்னாள் மாணவர்களுடன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் இவ்விழாவில் முன்னாள் மாணவர்கள் ஒருவர் ஒருவர் நன்றி தெரிவித்து நலம் விசாரித்துக் கொண்டனர்





கன்னியாகுமரி, பாலப்பள்ளம் பேரூராட்சியில் காலையில் உணவு வழங்கும் திட்டம் 1 முதல் 5ம் வகுப்பு வரை வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது விரிவுபடுத்தப்பட்டு 6. முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட உள்ளது. நாளையிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. அதனை தொடர்ந்து மிடாலக்காடு கடமான் குழி அரசு பள்ளிக்கு 27 மாணவ மாணவிகளுக்கு பாலப்பள்ளம் பேரூராட்சி தலைவர் திரு. டென்னிஷ் வார்டு உறுப்பினர் திருவேலாண்டி சாப்பாடு தட்டினை தலைமை ஆசிரியையிடம் வழங்கினார்கள். மற்றும் தேவிகோடு அரசு பள்ளிக்கு தலைவர் திரு. டென்னிஸ் துணைதலைவர்திரு.ஸ்டீபன்வார்டு உறுப்பினர்திரு.ஜெபர்ஷன்|திருவேலாண்டி மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் சேர்ந்து தலைமையாசிரியரிடம் 47 தட்டுகளை வழங்கினர்.



திண்டுக்கல் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நிலக்கோட்டை கோடாங்கி நாயக்கன்பட்டியை சேர்ந்த சந்திரா மாற்றுத்திறனாளி கலைஞர் கனவு இல்லம் கட்ட மானியம் தர மறுப்பதாக மனு அளிப்பதற்கு தவழ்ந்து வந்து மனு அளித்தனர்

# செய்யாறில் காய்ச்சல் பாதிப்பு தொடர்வதால் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்! வீடு வீடாக மருத்துவக் கண்காணிப்பு

## சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் நேரில் ஆய்வு

செய்யாறு, செப்.22

செய்யாறு மற்றும் சுற்றுவட்டார பகுதி களில் காய்ச்சல் பாதிப்பு தொடர்ந்து காணப்படுவதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நில வேம்பு குடிநீர் வழங்குதல், மருத்துவப் பரிசோதனை மற்றும் கொசு ஒழிப்பு உள் ளிட்ட தடுப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இப்பணி களை செய்யாறு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் நேரில் ஆய்வு செய்தார்.

செய்யாறு மற்றும் செய்யாறு சுகாதார மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங் கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் நாள்தோறும் 50க்கும் மேற்பட்டோர் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்று வருகின் றனர்.

திருவோத்தூர் பகுதியில் கடந்த சில நாட்களாக காய்ச்சல் அறிகுறியுடன் பொதுமக்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டவர்களில் 3 பேருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவர்கள் மேல் சிகிச்சைக்காக செங்கல் பட்டு மற்றும் வேலூர் அடுக்கம்பாறை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறப்பு மருத்துவ முகாம்

தொடர்ந்து காய்ச்சல் பாதிப்பு ஏற்படுவ தால், திருவோத்தூர் பகுதியில் வட்டார மருத்துவ அலுவலர் ஷர்மிளா தலைமை யில் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப் பட்டு வருகிறது. முகாமில் பொதுமக்க ளுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, காய்ச்சல் அறிகுறி கள் உள்ளவர்களுக்கு உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின் றன.

இந்த மருத்துவ முகாமை சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். காய்ச்சல் பாதிப்பில் இருந்து குணமடைந்து வீடு திரும்பியவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறிய அவர், உடல்நலத்தில் தொடர்ந்து கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். மேலும், பொதுமக்கள் காய்ச்சி ஆற வைத்த குடிநீரை பயன்படுத்த வேண் டும், காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுக வேண்டும் என்றும் சார் ஆட்சியர் அறிவுறுத்தினார்.

கொசு ஒழிப்பு பணிகள் தீவிரம்



காய்ச்சல் பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில் திருவோத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கொசு ஒழிப்பு பணி களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நக ராட்சி ஆணையர் ஆண்ட்ரூஸ் தலைமையில் 20க்கும் மேற்பட்ட தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணியா ளர்கள் களத்தில் ஈடுபட்டு, கொசு மருந்து தெளித்தல் உள்ளிட்ட பணிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

மேலும், வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கியுள்ள தண் ணீரை அகற்றுதல், பொதுமக்களுக்கு சுகா தார விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள் ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காய்ச்சல் பாதிப்பு தொடர்பாக சுகாதா ரத்துறை தொடர்ந்து கண்காணித்து வருவ துடன், பொதுமக்கள் அச்சமின்றி முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும் என அதிகாரி கள் அறிவுறுத்தியுள்ளனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA